RM3

# மூன்றாம் திருப்புதல் தேர்வு – 2025

10 –ம் வகுப்பு

## தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 3.00 மணி மதிப்பெண்: 100

### பகுதி–I (மதிப்பெண்கள்: 15)

அ) சரியான விடையைத் தேர்வு செய்க. 15×1=15

1. போரில் வெற்றி பெற்ற மன்னன் சூடிக் கொள்ளும் பூவைத் தேர்க

அ) கரந்தைப்பூ ஆ) வாகைப்பூ இ) தும்பைப்பூ ஈ) நொச்சிப்பூ

2. 'சங்க இலக்கியங்கள் ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இருதிணைகளும் பெற எடுத்தியம்புகின்றன" – இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான வரிசையைக் கண்டறிக.

அ) குறிஞ்சி, முல்லை, செய்தல், பாலை – நல்வினை, தீவினை

ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை

இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை மருதம் – அறம், பொருள், இன்பம்

ஈ) குறிஞ்சி, மருதம், மலை, காடு, வயல் – பணை, திணை

3. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு' – இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

4. முல்லை நில மக்களின் உணவுப் பொருள்கள் ______ அ) வெண்நெல், வரகு

ஆ) மலைநெல், தினை இ) வரகு சாமை ஈ) மீன், செந்நெல்

5. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டு குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

6. " காலின் ஏழடிப் பின் சென்று " –என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி

அ. விருந்தினரின் காலைத் தொட்டு வணங்கினர்

ஆ. விருந்தினரை ஏழு அடி வரை நடந்து சென்று வழியனுப்பினர்

இ. எழுவர் விருந்தினரின் பின் சென்று வழியனுப்பினர்

ஈ. ஏழுநாள்கள் விருந்தளித்துப் பின் விருந்தினரை வழியனுப்பினர்

7. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது. –இக்குறளில் பயின்று வரும் அணியைத் தேர்க அ. உவமை அணி

ஆ. வஞ்சப் புகழ்ச்சி அணி இ. சொற்பொருள் பின்வருநிலை அணி ஈ. எடுத்துக்காட்டு உவமை அணி

8. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்–

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்

இ) பண்பட்ட மனித நேயம் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

9. " பிரிந்தன புள்ளின் <u>கானில்</u>

பெரிதழுது <u>இரங்கித்</u> தேம்ப பாடலடிகளில் *அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.*

அ) துளை ஆ) கிளை இ) நிலம், வாட ஈ) காடு, நிலம்

10. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.

கல் சிலை ஆகும் எனில் நெல் ________ அ) சோறு ஆ) கற்றல் இ) எழுத்து ஈ) பூவில்

11. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

| | | | |
|---|---|---|---|
| அ) கொண்டல் | – | 1. மேற்கு | அ) 1, 2, 3, 4 |
| ஆ) கோடை | – | 2. தெற்கு | ஆ) 3, 1, 4, 2 |
| இ) வாடை | – | 3. கிழக்கு | இ) 4, 3, 2, 1 |
| ஈ) தென்றல் | – | 4. வடக்கு | ஈ) 3, 4, 1, 2 |

SIVANANDHA K .M.A.,B Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பாடலைப் படித்து வினாக்களுக்கு(12,13,14,15) விடையளிக்க:-

" செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?
முத்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும் விந்தை நெடு நிலைப்பும் வேற்றார் புகழுரையும் "

12) 'எந்தமிழ் நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்:
அ) எந் +தமிழ் +நா ஆ) எந்த +தமிழ் +நா இ) எம் +தமிழ் +நா ஈ) எந்தம் +தமிழ் +நா

13) 'செந்தமிழ்' என்பது: அ) பண்புத்தொகை
ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

14. 'உள்ளுயிரே' என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

15) " வேற்றார் புகழுரையும் " -இத்தொடரில் 'வேற்றார்' என்பது.
அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்று மொழியினர் ஈ) புலவர்

பகுதி-II (மதிப்பெண்கள்:18) பிரிவு -1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4×2=8
(21 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)

16. பாசவர், வாசவர், பல் நிண விலைஞர், உமணர் -சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

17. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) ம.பொ.சி. சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக இலக்கிய அறிவு பெற்றார்
ஆ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது

18. வறுமையின் காரணமாக உதவிகேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன?

19. குறிப்பு வரைக –" சதாவதானம்"

20. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

21. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5×2=10

22. எதிர்மறையாக மாற்றுக. (அ) மீளாத்துயர் (ஆ) எழுதாக் கவிதை

23. " அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது " -இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக: கிளர்ந்த

25. கலைச்சொல் தருக:- அ) GUILD ஆ) LAND BREEZE

26. சந்தக் கவிதையில் வந்த பிழையைத் திருத்துக.
" தேணிலே ஊரிய செந்தமிழின் –சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் –நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே"

SIVANANDHA K .M.A.,B Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506

27. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
அ) சிலை மேல் எழுத்து போல ஆ) தாமரை இலை நீர் போல
குறிப்பு:-செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.
சொல்லைக் கண்டு பிடித்துப் புதிரை விடுவிக்க
அ) பழமைக்கு எதிரானது. எழுதுகோலில் பயன்படும்.
ஆ) ஓரெழுத்தில் சோலை. இரண்டெழுத்தில் வனம்

28. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது.
இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.

பகுதி-III (மதிப்பெண்கள்-18) பிரிவு -I

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க:- 2×3=6

29. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது"
-இது போல் இளம் பயிர்வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஆஸ்திரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச் சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இச்சுவடி சேர நாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம். இது கி.பி.2ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

அ) சேர நாட்டின் துறைமுகம் எது?

ஆ) அரிய கையெழுத்துச் சுவடி எந்தத் தாளில் எழுதப்பட்டது?

இ) எகிப்து நாட்டில் உள்ள துறைமுகத்தின் பெயர் யாது?

31. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் " தர்க்கத்திற்கு அப்பால் " கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

பிரிவு-II

எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

(34 ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.)

32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப் படை எவ்வாறு காட்டுகிறது?

34. அ) ' அன்னை மொழியே ' -எனத் தொடங்கும் பெருஞ்சித்திரனார் பாடல் (அல்லது)

ஆ) "தூசும் துகிரும்"-எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

பிரிவு-III

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க- 2×3=6

35. விடையின் வகைகளை எழுதி, அதில் வெளிப்படை விடைகளைப் பற்றி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக

37. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு -இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி-V (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5×5=25


38. அ) ' பெரியாரைத் துணைகோடல் ' என்ற அதிகாரத்தில் வள்ளுவரின் கூற்றினை விளக்கி, உங்கள் கருத்தை எழுதுக. (அல்லது)

ஆ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக

39. அ) நீங்கள் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் குறிப்பிட்டு அந்நூலைப் படிக்குமாறு பரிந்துரை செய்து உங்கள் நண்பருக்குக் கடிதம் ஒன்று எழுதுக. (அல்லது)

ஆ உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் புதை சாக்கடைத் தூர்வாரவும் வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

40. அ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக....



SIVANANDHA K .M.A.,B Ed.
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

41. கடலூர் மாவட்டம், வள்ளலார் நகர், அருள் ஜோதி தெருவிலுள்ள 99 ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் கலியன் மகள் மைதிலி நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தம்மை மைதிலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

42. அ) தொலைக் காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி; திறன் பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை; காணொளி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்; எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கிய படி இருக்கும் தோழி இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட நீங்கள் செய்யும் முயற்சிகளை பட்டியலிடுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:-

1. Education is what remains after one has forgotten what one has learned in school - Albert Einstein
2. Tomorrow is often the busiest day of the week - Spanish proverb
3. It is during our darkest moment that we must focus to see the light - Aristotle
4. Success is not final,failure is not fatal.It is the courage to continue that counts - Winston Churchill
5. Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown

குறிப்பு: குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

கருத்தாழமும் வாசக சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமூக அமைப்பின் சமூக முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர் ஜெயகாந்தன். நேர்முக, எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சங்களில் விதைத்தவர். இவருடைய படைப்புகளுக்குக் குடியரசுத் தலைவர் விருது, சாகித்திய அகாதெமி விருது, சோவியத் நாட்டு விருது மற்றும் ஞானபீட விருது, தாமரைத் திரு விருதுகளும் கிடைத்துள்ளன. "நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும், எனது தனி முயற்சியின் பயனுமாகும்" என்று கூறுகிறார் ஜெயகாந்தன். 'அர்த்தமே படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது' என்பது அன்னாரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

(I ) ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?
(ii ) மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சில் விதைத்தவர் யார்?
(iii ) வாசகர் மனதில் ஜெயகாந்தன் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தினார்?
(iv ) எது படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது?.
(v ) உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

பகுதி -V (மதிப்பெண்கள்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 3×8=24

43. அ) திருப்புவனச் சக்கரவர்த்தி இரண்டாம் ராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.(அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்து பாய்ச்சல் கதை வழி விவாதிக்க. (அல்லது) ஆ) அழகர்சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) கீழ்க்காணும் தலைப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை –வெள்ளிவிழா கண்ட வள்ளுவர் சிலை -திருவள்ளுவரின் பெருமை –விழா ஏற்பாடுகள் – சிறப்பு விருந்தினர்களின் சிறப்புரை –முடிவுரை (அல்லது)

ஆ) போராட்டக் கலைஞர் –பேச்சுக் கலைஞர் –நாடகக் கலைஞர் –திரைக் கலைஞர் –இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.



Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com

SIVANANDHA K. M.A. B.Ed
GHS SANDHANAPALLI
KELAMANGALAM BLOCK
DENKANIKOTTA TK
KRISHNAGIRI DT
PH:9003373506
www.Padasalai.Net www.TrbTnpsc.com

# தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. இரத்த வகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி / அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண் மாணவரின் கையொப்பம்

தேதி :

இடம் : பெற்றோர் / பாதுகாலவரின் கையெழுத்து

www.Padasalai.Net

Knidly Send Me Question & Answer Keys to Us: padasalai.net@gmail.com